# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

******

**ஆணை எண்: 246 /பேரூ/2024**
**நாள் : 24.04.2025**

திரு. து. தமிழ்செல்வன்,
பரமத்தி,
நாமக்கல் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பரமத்தி தேர்வு நிலை பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம். – எதிர் மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், பரமத்தி அஞ்சல், கபிலர்மலை ரோடு, பொதுப்பணித் துறை குடியிருப்பு கதவு எண்.88, என்ற முகவரியை சேர்ந்த திரு. து. தமிழ்செல்வன் என்பவரின் 19.12.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.12.2024 அன்று பெறப்பட்டு, 246/பேரூ/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

நாமக்கல் மாவட்டம், பரமத்தி அஞ்சல், கபிலர்மலை ரோடு, பொதுப்பணித் துறை குடியிருப்பு கதவு எண்.88 என்ற முகவரியை சேர்ந்த திரு. து. தமிழ்செல்வன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

"நான் மேற்கண்ட முகவரியில் 18 வருடங்களாக வசித்து வருகிறேன். என்னுடைய நிலத்தின் புல எண்.534/33 (2008ஆம் ஆண்டுக்கான சொத்து வரி ரசீது இணைக்கப்பட்டுள்ளது)

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் 22.12.2023 அன்று மனு கொடுத்தேன். இந்த மனுவில் எங்கள் தெருவிற்கு சாலை, தெரு விளக்கு அமைத்து தர கோரியிருந்தேன். பரமத்தி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 05.02.2024 நாளிட்ட கடிதத்தில், செயல் அலுவலர் மற்றும் தெரு விளக்கு உதவியாளரால் சம்பந்தப்பட்ட இடத்தினை 22.01.2024 தேதியன்று ஆய்வு செய்ததாகவும், சிமெண்ட் சாலை மற்றும் தெருவிளக்கு அமைக்க கோரிய இடமானது பட்டாதாரர் பெயரில் உள்ளதால் மேற்படி சாலையினை தானபத்திரம் முலம் பேரூராட்சிக்கு

ஒப்படைக்கும் பட்சத்தில் சிமெண்ட் சாலை, தெருவிளக்கு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் “ஒரே வீடு மட்டுமே உள்ளதால் சாலை தெருவிளக்குகள் அமைக்க வழிவகையில்லை” என எனது மனு நிராகரிக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டது.

என் வீட்டுக்கு செல்லும் சாலை பட்டாதாரர் பெயரில் இல்லை என்பதை பரமத்தி கிராம (FMB) வரைபடம் - புல எண் (534) மூலம் தெரிந்துகொள்ளலாம்.

எனது மனுவினை நிராகரித்து 40 மீட்டர் தொலைவிற்கு மட்டும் சாலை புறக்கணிக்கப்பட்டது. ஏற்கனவே எனது வீட்டின் தெருவினை தவிர அனைத்து பகுதிகளிலும் கான்கிரிட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. 2 வருடங்களாக கான்கிரிட் சாலை வேண்டுமென பல மனு கொடுத்தும் பயனில்லை. இரவு நேரத்தில் இருட்டின் காரணமாக யாரும் செல்வதில்லை. திருட்டு பயம் உள்ளது. என் வீடு வயல் ஒட்டியுள்ள பகுதி என்பதால் பாம்பு, தேள், பூரான் போன்ற விஷ சந்துக்கள் வருகின்றன. மக்கள், குழந்தைகள் பயந்து பாதிப்புக்கு உள்ளாகியுள்ளோம்.

ஒரு வரி செலுத்துபவராக, சாலைகள், தெருவிளக்குகள் போன்ற அடிப்படைத் தேவைகளை அரசாங்கம் எனக்கு வழங்கும் என்று எதிர்பார்க்கிறேன். உடனடியாக வரி செலுத்தும் குடிமக்களுக்கு இந்த அத்தியாவசிய சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வது அரசு ஊழியர்களின் கடமையாகும். ஆனால், எனது பகுதியில் இந்த அடிப்படை வசதிகள் இல்லாததால், மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வருகிறேன். இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண உள்ளாட்சி நிர்வாகத்திடம் பலமுறை கோரிக்கை விடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஒரு குடிமகனாகவும், வரி செலுத்துபவராகவும், அரசாங்கத்திடம் இந்த அடிப்படைத் தேவைகளைக் கோர எனக்கு உரிமை உண்டு. இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும், எனது பகுதியில் வசிப்பவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரவும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 31.12.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் பரமத்தி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பரமத்தி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 13.01.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

திரு. து. தமிழ்செல்வன், என்பவரின் புகார் மனுவில் பரமத்தி பேரூராட்சிக்குட்பட்ட பரமத்தி கிராமம் சர்வே எண்.534-ல் 40 மீட்டர் தொலைவிற்கு சாலை மற்றும் தெருவிளக்கு வசதிகள் அமைக்க கோரியுள்ளார். மேற்படி பரமத்தி கிராமம் சர்வே எண்.534-ன் புலப்பட வரைப்படத்தில் சர்வே எண்.534/1A7ல் உள்ள இடம் பரமத்தி சார்பு நீதிமன்ற வழக்கு எண்.O.S. No.108/2018ல் 06.11.2019 நாளிட்ட ஆணையில் வழங்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் பட்டா எண்.11697ன்படி 1. திருமதி. கோமதி, க/பெ. மோகன்ராஜ், 2. திரு. வடிவேல், த/பெ. செல்லப்பன், 3. மைனர். லத்திஸ், காப்பாளர். திரு. வடிவேல் மற்றும் 4. மைனர். ஹஸ்வந்த் ஆரவ், காப்பாளர். திரு. வடிவேல் ஆகியோர் பெயரில் உள்ளது. மேற்காணும் இடத்தின் உரிமையாளர் திரு. செ. வடிவேல் என்பவர் மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்துள்ள 40 மீட்டர் தொலைவிற்கு பரமத்தி தேர்வுநிலை பேரூராட்சி மூலம் சாலை மற்றும் தெருவிளக்கு வசதிகள் அமைக்க ஆட்சேபனை தெரிவித்துள்ளார். எனவே

பட்டாதாரர் பெயரில் உள்ள இடத்தில் சாலை மற்றும் தெருவிளக்கு வசதிகள் அமைக்க வழிவகை இல்லை என்பதை பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**4.** மனுதாரரும் மற்றும் பரமத்தி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 19.03.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.03.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. து. தமிழ்செல்வன், என்பவர் 19.03.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

- நாமக்கல் மாவட்டம், பரமத்தி தேர்வு நிலை பேரூராட்சிக்குட்பட்ட புல எண்.534/33ல் அமைந்துள்ள எண்.88 பொதுப்பணித்துறை குடியிருப்பு, கபிலர் மலை தெருவில் அமைந்துள்ள வீட்டில் கடந்த 18 வருடங்களாக நான் வசித்து வருகிறேன். இத்தெருவில் தெருவிளக்கு மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கக்கோரி 22.12.2023 அன்று பேரூராட்சியில் மனுவினை சமர்ப்பித்ததில், அவ்விடமானது பட்டாதாரர் பெயரில் உள்ளதால், மேற்படி சாலையினை பட்டாதாரரால் பேரூராட்சிக்கு ஒப்படைத்தால் மட்டுமே மின்விளக்கு மற்றும் சிமெண்ட் சாலை அமைக்க முடியும் என பேரூராட்சி செயல் அலுவலரால் 22.01.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளார்.

- ஆனால் 40 மீட்டர் தூரமுள்ள தனது வீடு அமைந்துள்ள சாலையானது பட்டாதாரர் பெயரில் இல்லை என்பதை பரமத்தி கிராம வரைபடம் (FMB-Field Measurement Book) மூலம் அறியலாம்.

- இந்நிலையில் 40 மீட்டர் உள்ள சாலையினை மட்டும் தவிர்த்து அனைத்து பகுதிகளிலும் கான்கீரிட் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

- பரமத்தி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதம் ந.க.எண்.123/2024 நாள் 21.06.2024 மற்றும் ந.க.எண்.25/2024 நாள் 23.02.2024–ன்படி, எனது வீட்டின் முன்பு 4.00 மீட்டர் அகலத்தில் சாலை அமைக்கப்பட்டது என தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், கடித ந.க.எண்.218/2024 நாள் 19.09.2024–ன்படி மேற்படி இடத்தில் 5.00 மீட்டர் அகலத்தில் சாலை அமைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதின் மூலம் எனக்கு முரண்பாடாக தகவல் அளிக்கப்பட்டுள்ளது. உண்மையில் 6.00 மீட்டர் அகலத்தில் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

- பேரூராட்சியின் செயல் அலவலர் ந.க.எண்.86(18)/2023 நாள் 19.08.2024–ன்படி தனிமனை வரன்முறை திட்டத்தின்படி, சேலம், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் Sold Plot Frame Work SPF/W/SRDD No. 17412/2018 to 17430/2018–ல் 19 வரைபடங்களுக்கு ஒப்புதல் அளித்ததின் அடிப்படையில் சாலை அமைக்கப்பட்டுள்ளதாக கடித ந.க.எண்.123/2024 நாள் 21.06.2024–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் புல எண். 534/26 மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அது எனது வீட்டிலிருந்து வெகு தொலைவில் உள்ள மனைப்பிரிவாக உள்ள நிலையில், எதன் அடிப்படையில் எனது வீட்டிற்கு முன்பாக சாலை அமைக்கப்பட்டது என்பதனை அறிய முடியவில்லை.

- என் வீட்டுக்கு முன்பாக உள்ள புல எண்.534/A6 தடத்திற்கு பேரூராட்சிக்கு தானபத்திரம் ஒப்படைக்காமல், விதிமீறி 100 மீட்டர் தொலைவிற்கு கான்கீரிட் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

- புல எண்.534/1A4, 534/1A5A1 பட்டாதாரர் பெயரில் உள்ளது. கான்கிரீட் சாலை பரமத்தி தேர்வு நிலை பேரூராட்சியால் கான்கீரிட் சாலை 150 மீட்டர் தொலைவிற்கு அமைக்கப்பட்டது.

- எனது வீட்டின் பின்புறம், வீடே இல்லாத இடத்தில் காலி மனைப்பிரிவில் பட்டாதாரர் பெயரில் உள்ள இடத்தில் கான்கீரிட் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

எனவே பேரூராட்சிக்கு வரி செலுத்தும் நான், இரவு நேரங்களில் மின்விளக்கு இல்லாமல் பாதுகாப்பின்றி இருப்பதால், எனது தெருவிற்கு அடிப்படை வசதிகளான மின்விளக்கு மற்றும் சிமெண்ட் சாலை அமைப்பதற்கு ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரரான பரமத்தி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ரெ.ப. சுப்பிரமணியன் என்பவர் 19.03.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:–

"நாமக்கல் மாவட்டம். பரமத்தி தேர்வு நிலை பேரூராட்சிக்குட்பட்ட பரமத்தி கிராமம் புல எண்.534/1ஏ7–ல் 40 மீட்டர் தொலைவிற்கு சாலை மற்றும் தெருவிளக்கு வசதிகள் அமைக்குமாறு மனுதாரர் கோரும் இடமானது, பரமத்தி சார்பு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட அசல் வழக்கு எண்.108/2018ல் 06.11.2019 நாளிட்ட தீர்ப்புரையின்படியும் மற்றும் பட்டா எண்.11697ன்படியும் புல எண்.534/1ஏ7–ல் உள்ள நிலம் மற்றும் தடபாகம் நிலமானது திருமதி கோமதி, திரு.வடிவேல், மைனர் லத்தீஷ் மற்றும் மைனர் ஹஸ்வந்த்ஆரவ் ஆகியோர்களுக்கு சொந்தமான இடமாக உள்ளது.

- மனுதாரர் சாலை அமைக்கக் கோரும் இடமானது, மேற்படி நில உரிமையாளர்களின் சொந்தமானது என்பதால், சாலை அமைக்க ஆட்சேபனை தெரிவித்து 27.12.2024 நாளிட்ட கடிதத்தினை பேரூராட்சிக்கு சமர்ப்பித்துள்ளனர்.

- பரமத்தி தேர்வுநிலை பேரூராட்சி செயல்அலுவலரின் கடிதம் ந.க. எண்.123/2024 நாள் 21.06.2024 மற்றும் ந.க. எண்.25/2024 நாள் 23.02.2024–ல் ஐந்து மீட்டர் அகல சாலை என்பதற்கு பதிலாக நான்கு மீட்டர் அகல சாலை என கணினியில் தட்டச்சு செய்யும்பொழுது தவறுதலாக பதிவு செய்யப்பட்டது. அளவு புத்தகத்தில் உள்ள படி ஐந்து மீட்டர் அகலத்தில் சாலை அமைக்கப்பட்டது.

- தனிமனை வரன்முறை திட்டத்தின்படி சேலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்ட Sold Plot Frame work–SPFW/SRDD No.17412/2018 முதல் 17430/2018 முடிய உள்ள 19 வரைபடங்களுக்கு ஒப்புதல் அளித்ததின் அடிப்படையில் Sold Plot Frame work-SPFW/SRDD No.17413/2018 மற்றும் 17418/2018 நாள் 01.11.2018-ல் உள்ள அரசாணை எண் 172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 13.10.2017–ல் தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படி சாலை அமைக்கப்பட்டது.

- பரமத்தி பேரூராட்சிக்குட்பட்ட பரமத்தி கிராமம் சர்வே எண்.534/1ஏ6 மற்றும் 534/1ஏ5ஏ1 உள்ள சாலைகள் தனிமனை வரன்முறை திட்டத்தின் படி சேலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்ட Sold Plot Frame work–SPFW/SRDD No.17412/2018 முதல் 17430/2018 முடிய உள்ள வரைபடத்தில், அரசாணை எண் 172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 13.10.2017–ல் தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படி சாலை அமைக்கப்பட்டது.

- மனுதாரர் தெரிவித்துள்ளவாறு அவரது வீடு அமைந்துள்ள இடத்தின் முன் உள்ள கிழமேல் சாலை மற்றும் தென்வடல் சாலையில் ஏற்கனவே உள்ள தெருவிளக்குடன் கூடிய மின்கம்பங்களுக்கு இடையில் இருளாக உள்ள பகுதியில் பரமத்தி பேரூராட்சி மன்றத்தின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மின்வாரியத்தில் மதிப்பீடு பெறப்பட்டு புதிய தெருவிளக்குகள் அமைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் நிலையில், பரமத்தி கிராமம் புல எண்.534/1ஏ7–ல் 40 மீட்டர் தொலைவிற்கு பட்டாதாரர் பெயரில் உள்ள இடத்தில் சாலை மற்றும் தெருவிளக்கு வசதிகள் அமைக்க வழிவகையில்லை என்பதை இம்முறை மன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம் , பரமத்தி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

நாமக்கல் மாவட்டம், பரமத்தி என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. து. தமிழ்செல்வன் என்பவர் தனது 19.12.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் நாமக்கல் மாவட்டம், பரமத்தி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட PWD காலனி அமைந்துள்ள கபிலர்மலை தெருவில் வசிக்கும் மனுதாரரின் 40 மீட்டர் துாரமுள்ள இடத்திற்கு சிமெண்ட் சாலை மற்றும் தெருவிளக்கு அமைக்கக் கோரியதில், இத்தெருவில் ஒரேயொரு வீடு மட்டும் அமையப் பெற்றதால் மேற்படி வசதிகள் செய்து தர இயலாது எனவும், தானபத்திரம் மூலம் சாலையினை பேரூராட்சிக்கு ஒப்படைக்கும் பட்சத்தில் தெருவிளக்கு மற்றும் சாலை வசதிகள் செய்து தர முடியும் என பரமத்தி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளதாகவும், ஆனால் எனது வீடு தவிர அனைத்துப் பகுதிகளிலும் கான்கீரிட் சாலை அமைக்கப்பட்டுள்ளது எனவும் புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் திரு. து. தமிழ்செல்வன் என்பவர் பரமத்தி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட பரமத்தி கிராமம் புல எண்.534/1A7ல் 40 மீட்டர் தொலைவிற்கு சாலை மற்றும் மின்விளக்கு அமைக்கும் இடமானது அரசால் அங்கீகரிக்கப்படாத மனையாக உள்ள இடமாகும். மேலும் அவ்விடமானது பரமத்தி சார்பு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட அசல் வழக்கு எண்.108/2018ல் 06.11.2019 நாளிட்ட தீர்ப்புரைபடியும் மற்றும் பட்டா எண்.11697ன்படியம் திருமதி. கோமதி, திரு. வடிவேல், மைனர்கள் லத்திஸ் மற்றும் ஹஸ்வந்த் ஆரவ் ஆகியோர்களுக்கு சொந்தமான இடமாக உள்ளதை பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள நீதிமன்ற தீர்ப்புரை மற்றும் வருவாய்த் துறை ஆவணம் மூலம் தெரிய வருகிறது.

மனுதாரர் சாலை அமைக்கும் இடமானது மேற்படி நில உரிமையாளர்களுக்கு சொந்தமானது என்பதால், அவர்கள் பேரூராட்சிக்கு சமர்ப்பித்த 27.12.2024 நாளிட்ட மனுவில் சாலை அமைக்க ஆட்சேபனை தெரிவித்துள்ளதையும் அறிய முடிகிறது.

மனுதாரர் கோரும் சாலை அமைக்கும் இடத்தினை தவிர அனைத்து தெருவிலும், ஒரு வீடு மற்றும் வீடற்ற இடத்திலும் சாலை அமைக்கப்பட்டுள்ளது என்கிற புகாருக்கு மேற்படி சாலைகள் அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 13.10.2017ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி, தனிமனை வரன்முறை திட்டத்தின் கீழ் சேலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரால் அங்கீரிக்கப்படாத மனைப் பிரிவுகள் வரன்முறைப்படுத்தப்பட்டதால் சாலைகள் அமைக்கப்பட்டன என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மேற்காணும் சூழ்நிலையில் மனுதாரர் பரமத்தி கிராமம் புல எண்.534/1A7ல்; 40 மீட்டர் தொலைவிற்கு பட்டாதாரர் பெயரிலுள்ள இடத்தில் சாலை மற்றும் தெரு விளக்குகள் அமைக்க வழிவகையில்லை என்பதையும் செயல் அலுவலரின் அறிக்கை மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

இருப்பினும், மனுதாரர் வீடு அமைந்துள்ள இடத்தின் முன் உள்ள கிழமேல் சாலை மற்றும் தென்வடல் சாலையில் ஏற்கனவே உள்ள தெருவிளக்குடன் கூடிய மின் மின்கம்பங்களுக்கு இடையில் இருளாக உள்ள பகுதியில் மின் விளக்குகள் அமைப்பதற்கு பேரூராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்படும் என பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு மேற்படி இடத்தில் தெரு விளக்குகள் அமைக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, பரமத்தி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும், மனுதாரர் கோரும் சாலை அமைக்கும் இடத்தினை தவிர அனைத்து தெருவிலும், சாலை அமைக்கப்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்கண்ட சாலைகள் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் வரன்முறைப்படுத்தப்பட்ட பின் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்திடும் வகையில் பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர் தலைமையில் ஒரு குழு அமைத்து ஆய்வு செய்து, அதன் அறிக்கையினை பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தியும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 24ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. து. தமிழ்செல்வன்,
கதவு எண்.88, பொதுப்பணித் துறை குடியிருப்பு, பரமத்தி,
நாமக்கல் – 637 207, நாமக்கல் மாவட்டம்.
2) செயல் அலுவலர்,
பரமத்தி தேர்வுநிலை பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை –600 028

4) இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer)
(பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 600 028

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.